என்ற அடிப்படைக் காரணங்களைக் கொண்டு ஏலம் விடப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கோ. இரவிராஜ், என்ன நீங்கள் கையைத் தூக்கி விட்டு, நான் அனுமதிக்கும்போது உட்கார்ந்து கொண்டு இருக்கிறீர்கள்?

திரு. கோ. இரவிராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆற்றுப்படுகையிலே மணல், ஏரிகளில் gravel போன்ற கனிம வளங்களைச் சிலர் தவறான முறையிலே எடுத்து வருகிறார்கள். அதைத் தடுப்பதற்காகப் பல அதிகாரிகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். அப்படி மேற்கொள்கிற அதிகாரிகள் மீது—கடந்த 3 மாதத்திற்கு முன்பாக அம்பத்தூர் வட்டாட்சியர் அவர்கள்மீது-- கொலை வெறித் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. அதுபோல, கும்மிடிப்பூண்டி வட்டாட்சியர் அவர்களையும் கொலை செய்யக்கூடிய அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். சமீபத்திலேகூட, காஞ்சிபுரம் மாவட்டம், பழையசீவரம் கிராமத்திலே சண்முகசுந்தரம் என்கிற ஒரு அதிகாரி லாரி ஏற்றிப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். ஆக, பல அதிகாரிகள் (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் கேட்டு முடித்துக்கொள்கிறேன். பல அதிகாரிகள் இதைத் தடுப்பதற்கான பல்வேறு முயற்சிகளையெல்லாம் எடுத்துக்கொண்டு இருந்தாலும், ஒரு சில அதிகாரிகள் அதற்கு உடந்தையாகவும் இருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது. ஆகவே, அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க.....

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 367, திரு. ஆ.கு.சீ. அன்பழகன், மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

367—

துணை மின் நிலையம்

***20487—திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2003 ஏப்ரல் 30]

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, அயல்வாடி கிராமத்தில் துணை மின் நிலையம் அமைத்துத் தரப்படுமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் சட்டமன்றத் தொகுதியில், அயல்வாடி கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ.கு.சீ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் வெட்டே இல்லாத தமிழகத்தை உருவாக்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். பெரணமல்லூர் தொகுதி, அயல்வாடி கிராமம், மண்டகொளத்தூர் கிராமம், வடமாதிமங்கலம் ஆகிய பகுதிகளில் மின் அழுத்தக் குறைவு அதிகமாக உள்ளது. அங்கு விவசாய மின் மோட்டார்கள் அதிகமாக உள்ளதால், விவசாயிகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. அதைப்போல, அங்கே கிராம மக்கள் பயன்படுத்தக்கூடிய மின் இணைப்புகள் அதிகமாக உள்ளதாலும் மிகுந்த மின் அழுத்தக் குறைவு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து, மேற்படி கிராமங்களில் புதிதாகத் துணை மின் நிலையம் அமைக்க முன்வருவார்களா? ஏற்கெனவே வடமாதிமங்கலம் கிராமத்திலே துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு இருந்தும், மின் அழுத்தக் குறைவின் காரணமாக அந்தப் பகுதி மிகுந்த பாதிப்பை அடைந்துள்ளது. அந்தப் பகுதியில் உள்ள துணை மின் நிலையத்தை upgradation செய்து, தரம் உயர்த்தி, 110 K.V.A. ஆக மாற்றித் தரவும் ஒரு துணை மின் நிலையத்தை அமைக்கவும் அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அயல்வாடி கிராமத்திற்குப் பக்கத்திலே ஆணைகோவில் என்கின்ற கிராமம் இருக்கிறது. அந்த ஆணைகோவில் கிராமத்தில் கிட்டத்தட்ட 75 இலட்சம் ரூபாய் செலவில், ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்பெற்று, கிட்டத்தட்ட பணிகள் முடிவடையும் தறுவாயில் இருக்கின்றன. ஆகவே, 3 கிலோ மீட்டர் தொலைவே இருக்கின்ற காரணத்தினால், அயல்வாடி கிராமத்திற்கும் இந்த ஆணைகோவில் கிராமத்திலே அமைக்கப்படுகின்ற துணை மின் நிலையம் மின் அழுத்தக் குறைவைச் சரி செய்யும் என்பதைத்

[2003 ஏப்ரல் 30

தெரிவித்துக்கொண்டு, ஆகவே அயல்வாடி கிராமத்திற்குத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் சொன்ன வடமாதிமங்கலம் கிராமத்தில் இருக்கின்ற *33/11* K.V.A. துணை மின் நிலையத்தை *110* K.V.A. ஆக உயர்த்துவதற்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அம்மாவினுடைய அரசு முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்.

திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியில் சேவூர், பையூர் ஆகிய இடங்களில் *2* துணை மின் நிலையங்கள் அமைக்கும் திட்டம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அது என்ன நிலையில் இருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *368*, திரு. மே.ப. காமராஜ், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

(*மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை*)

368—

நியாய விலைக் கடை

***9208—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மல்லியக்குட்டை ஊராட்சி, மல்லியக்குட்டை நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து, அத்திராம்பட்டியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?